தினமணி

## நாட்டுக்கோழி வளர்ப்பு, மூலிகை மருத்துவப் பயிற்சி

First Published : 30 Jan 2012 12:25:37 PM IST

கரூர், ஜன. 29: கரூர் பண்டுதகாரன்புதூரிலுள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பும் - மூலிகை மருத்துவமும் என்ற தலைப்பில் இலவசப் பயிற்சி திங்கள்கிழமை (ஜன. 30) அளிக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சி வகுப்பில் நாட்டுக்கோழிகளைத் தாக்கும் நோய்களுக்கு தகுந்த எளிய மூலிகை மருத்துவம் குறித்து கோழியின மூலிகை மருத்துவத் துறை வல்லுநர்களால் ஒரு நாள் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதில் பங்கேற்க விரும்புவோர் காலை 9.30 மணிக்கு பயிற்சி மைய வளாகத்திற்கு வர வேண்டும்.

மேலும், 04324-294335 என்ற எண்ணில் தொடர்புகொண்டு, பெயரையும் பதிவு செய்து கொள்ளுமாறு ஆராய்ச்சி மையத்தின் இணைப் பேராசிரியர் கே. செந்தில்வேல் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## மேட்டூர் அணை முன்கூட்டியே திறந்ததால் 100 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி

First Published : 31 Jan 2012 01:15:36 AM IST

சென்னை, ஜன. 30: மேட்டூர் அணையை முன்கூட்டியே பாசனத்துக்காக திறந்து விட்டதால் முதல் முறையாக உணவு தானிய உற்பத்தி 100 லட்சம் டன் அளவினைத் தாண்டும் என தமிழக அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ள விவரம்:

இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்த இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

மேட்டூர் அணையிலிருந்து முன்கூட்டியே பாசனத்துக்காக நீர் திறக்க முதல்வர் உத்தரவிட்டதால் மாநிலத்தில் அபரிமிதமான குறுவை விளைச்சல் ஏற்பட்டது. இதனால் கடந்த ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட 75.95 லட்சம் டன் என்ற அளவை விஞ்சி இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி முதல்முறையாக 100 லட்சம் டன் அளவினையும் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்கும் அரசின் சிறப்பு திட்டங்கள் கிராமப்புற ஏழை மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன.

சுமார் 1.12 லட்சம் குடும்பங்கள் 2011-12-ஆம் ஆண்டில் இந்தத் திட்டங்களால் பயன்பெறும்.

இவற்றுடன் கால்நடை பராமரிப்புத் துறையின் வளர்ச்சியை ஊக்குவிக்க உதவும் வகையில், விரிவாக்க வசதிகளையும் கட்டமைப்புகளையும் அரசு வலுப்படுத்தி வருகிறது என்று அதில் கூறப்பட்டுள்ளது

---

**அரசு கொள்முதலுக்காகக் காத்திருக்கும் நெல் விவசாயிகள்**

-வி.என். ராகவன்-

First Published : 31 Jan 2012 03:18:38 AM IST



*திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் அருகே கிளிக்கூடு பகுதியில் அறுவடையான நெல் மணிகளை இயந்திரம் மூலம் கதிரடிக்கும் விவசாயிகள்.*

திருச்சி, ஜன. 30: திருச்சி மாவட்டத்தில் சம்பா பருவ நெல் அறுவடைப் பணிகள் தொடங்கிவிட்ட நிலையில், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைப் பரவலாகத் திறந்து கொள்முதலைத் தொடங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

இந்த மாவட்டத்தில் நிகழ் சம்பா, தாளடி பருவத்தில் இலக்கை (62,500 ஹெக்டேர்) விஞ்சி 64,178 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது.

இதைத்தொடர்ந்து, ஜனவரி 2-வது வாரத்தில் அறுவடைப் பணிகள் தொடங்கின. இந்தப் பணிகள் கடந்த 10 நாள்களாகப் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்போதைய நிலையில், சராசரியாக ஹெக்டேருக்கு 6.8 டன் மகசூல் கிடைத்து வருகிறது என்றும், இது மாவட்டத்தின் இயல்பான மகசூல் அளவுக்கு இணையானது எனவும் வேளாண் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

ஏக்கருக்கு பொன்னி ரகங்கள் 24 முதல் 34 மூட்டைகளும், கோ 43 ரகம் 37 முதல் 40 மூட்டைகளும் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

ஆனால், அறுவடைப் பணிகள் தொடங்கினாலும், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் பரவலாகத் திறக்கப்படவில்லை.

"இந்தப் பருவத்துக்கு 45 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தேவைப்படும். இவற்றில், ஏற்கெனவே குறுவைப் பருவத்துக்காக திறக்கப்பட்ட 16 அரசு கொள்முதல் நிலையங்கள் தொடர்ந்து செயல்படுகின்றன. படிப்படியாக மற்ற இடங்களில் திறக்கப்படும். இதுவரை விவசாயிகள் நெல் மூட்டைகளைக் கொண்டு வராததால், கொள்முதல் மேற்கொள்ளப்படவில்லை' என்றனர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள்.

ஆனால், திறக்கப்பட்டதாகக் கூறப்படும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் ஆள்கள் முறையாக நியமனம் செய்யப்படாததால், அவையெல்லாம் செயல்படாத நிலையில்தான் இருக்கின்றன என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதனால், விவசாயிகள் குறைந்த விலைக்குத் தனியாரிடம் நெல் மூட்டைகளை விற்று வருகின்றனர்.

இதுகுறித்து ஏரி, ஆற்றுப் பாசன விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பூ. விசுவநாதன் தெரிவித்தது:

"அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டால்தான் வியாபாரிகள் கூடுதல் விலைக்குக் கொள்முதல் செய்ய முன்வருவர். இல்லாவிட்டால், வியாபாரிகள் குறைந்த விலையிலேயே நெல்லை கொள்முதல் செய்வர்.

ஏற்கெனவே சாகுபடிச் செலவு அதிகரித்துவிட்டதால், அரசு நிர்ணயித்துள்ள விலையே கட்டுப்படியாகவில்லை. இப்போது, அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கிலோவுக்கு ரூ. 11.80 என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசு கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படாததால், வியாபாரிகள் கிலோவுக்கு ரூ. 10.50 என்ற விலையில்தான் நெல்லை கொள்முதல் செய்து வருகின்றனர். இதனால், விவசாயிகள் மிகுந்த நஷ்டத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

எனவே, அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் போதுமான அளவுக்குப் பணியாளர்களை நியமித்து, கொள்முதல் பணியைத் தொடங்க வேண்டும்' என்றார் விசுவநாதன்.

இதேபோல, அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஈரப்பத விகிதத்தில் எந்தவிதத் தளர்வும் ஏற்படுத்தப்படவில்லை. ஏற்கெனவே, உள்ள 17 சதம்தான் இப்போதும் தொடர்கிறது. இதனால், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்தாலும், ஈரப்பதத்தைக் காரணம் காட்டி கொள்முதல் செய்ய மறுக்கப்படும். விவசாயிகளுக்கும் நெல் மூட்டைகளை விற்பதிலும் சிரமம் ஏற்படும் என்கிறார் அய்யன் வாய்க்கால் பாசனதாரர் சங்க ஒருங்கிணைப்பாளர் என். வீரசேகரன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தது:

"இப்போது நிலவும் பனிப் பொழிவால் நெல்லில் 20 சதத்துக்கும் அதிகமாகத்தான் ஈரப்பதம் உள்ளது. இந்தப் பனிப் பொழிவு பிப்ரவரி வரை தொடரும். இதனால், அறுவடையான நெல் உடனே காய வாய்ப்பில்லை. எனவே, நெல் ஈரப்பதத்தில் 21 சதம் வரை தளர்வு ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால், வியாபாரிகளுக்குத்தான் சாதகமாக அமைந்துவிடும். பெரும் சிரமத்துக்குக் கிடையே சாகுபடி மேற்கொண்ட விவசாயிகளுக்கு நஷ்டம்தான் ஏற்படும்' என்றார் வீரசேகரன்.

அறுவடைப் பணிகள் பிப்ரவரியில் முழுவீச்சில் மேற்கொள்ளப்படும். ஒரே நேரத்தில் பெரும்பாலான விவசாயிகள் அறுவடை மேற்கொள்ளும்போது வியாபாரிகள் மேலும் விலையைக் குறைக்க வாய்ப்புள்ளது.

எனவே, மாவட்டத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைப் பரவலாகத் திறக்க வேண்டும். அது மட்டுமல்லாமல், ஈரப்பதத்திலும் தளர்வு ஏற்படுத்தினால்தான் மிகுந்த சிரமத்துக்கு இடையே சாகுபடி மேற்கொண்டதற்கு ஓரளவுக்காவது பலன் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

---

**மரவள்ளிக்கிழங்கில் ஸ்டார்ச் சதவீதம் கண்டறிய விவசாயிகளுக்கு செயல்விளக்கம்**

First Published : 28 Jan 2012 12:30:27 PM IST

தருமபுரி, ஜன. 27: மரவள்ளிக் கிழங்கில் உள்ள ஸ்டார்ச் சதவீதத்தை அறிய விவசாயிகளுக்கு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

தருமபுரி ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பாயிண்ட் தராசு மூலம் இந்த செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

கூட்டத்தில் ஆட்சியர் ஆர். லில்லி பேசியது:

விவசாயிகள் அளிக்கும் மனுக்களுக்கு அதிகாரிகள் உரிய பதிலுடன் வரவேண்டும். காட்டில் உள்ள சிவப்பு சந்தன மரங்களைப் பாதுகாக்க சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படும்.

மொரப்பூர் கால்நடை மருத்துவமனைக்கு விரைவில் ரூ.4 லட்சத்தில் கூடாரம் அமைக்கப்பட உள்ளது. ஏலகிரியில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அதுவரை நடமாடும் மருந்தகங்களை வாரந்தோறும் அனுப்பி சிகிச்சை அளிக்கப்படும் என்றார்.

இதில், வேளாண் இணை இயக்குநர் மனோகரன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் கலைசெல்வி, வேளாண் வணிகத்துறை இணை இயக்குநர் செல்வம் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**நறுமணப் பொருள்கள் உற்பத்தியில் உலக அளவில் இந்தியா முதலிடம்**

ஜனவரி 30,2012,12:39



புதுடில்லி: நறுமணப் பொருள்கள் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் முதலிடத்தில் உள்ளது. 2000ம் ஆண்டு நிலவரப்படி நம் நாட்டில் ஒட்டுமொத்த அளவில் சுமார் 22.56 லட்சம் டன் நறுமணப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. கடந்த பத்து ஆண்டுகளில் உற்பத்தி மேலும் அமோக வளர்ச்சி கண்டுள்ளதாக தெரிகிறது. இந்நிலையில் இந்தியாவின் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நறுமணப் பொருள்கள் பட்டியலில் மிளகாய், மிளகு, மஞ்சள்,

சீரகம், தனியா, வனிலா, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, பட்டை, ஏலம், இஞ்சி உள்ளிட்ட ஏராளமான பொருள்கள் இடம் பெறுகின்றன. இவற்றுள் பல மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களாகவும் மாற்றப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவின் நறுமணப் பொருள்களுக்கு உலகம் முழுவதுமாக நல்ல வரவேற்பு உள்ளது.

சர்வதேச அளவில் நறுமணப் பொருள்கள் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் இருந்து வரும் நிலையில் சீனா இரண்டாவது இடத்திலும் (5.85 லட்சம் டன்), இந்தோனேஷியா மூன்றாவது இடத்திலும் (2.61 லட்சம் டன்), பாகிஸ்தான் நான்காவது இடத்திலும் (2.08 லட்சம் டன்), நைஜீரியா ஐந்தாவது இடத்திலும் (1.46 லட்சம் டன்), எத்தியோப்பியா ஆறாவது இடத்திலும் (1.11 லட்சம் டன்), மெக்சிகோ ஏழாவது இடத்திலும் (91,755 டன்) உள்ளன. மற்ற நாடுகள் அனைத்துமாக ஆண்டுக்கு 1.05 லட்சம் டன் நறுமணப் பொருள்களை உற்பத்தி செய்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ஆக, உலகின் மொத்த நறுமணப் பொருள்கள் உற்பத்தி ஏறக்குறைய 49 லட்சத்து 39 ஆயிரத்து 990 டன் என கணக்கிடப் பட்டுள்ளது.

---

**ஆடு வளர்க்க தயாரா? "கெடு' தேதி நெருங்குது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2012,22:42 IST

சூலூர் : "சின்னியம்பாளையம் மற்றும் கிட்டாம்பாளையம் ஊராட்சியில், விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்துக்கான விண்ணப்பங்களை பிப்., 1 வரை, ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அளிக்கலாம்' என, கால்நடைத்துறை அறிவித்துள்ளது. கிராமப்புறத்தில் வசிக்கும் நிலமற்ற விவசாயத்தொழிலாளர்கள் பயனடையும் வகையில், விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தை, தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. "பயனாளிகள் பெண்களாக இருக்க வேண்டும்; ஒரு பயனாளிக்கு நான்கு ஆடுகள் வழங்கப்படும்.

விருப்பப்படி செம்மறி அல்லது வெள்ளாடுகளை வாங்கி பராமரிக்கலாம்' என அரசு அறிவித்துள்ளது.

இதற்கான, விண்ணப்பங்களை பிப்.,1க்குள் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அளிக்க வேண்டும்.

வரும் 4ம்தேதி நடக்கும் கிராம சபையில், பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்வு

செய்யப்படும் பயனாளிகளுக்கு ரூ.10 ஆயிரம் வழங்கப்படும். பயனாளிகள் தாங்களே ஆடுகளை கொள்முதல் செய்து கொள்ளலாம் என, கால்நடைத்துறை அறிவித்துள்ளது.

---

**பூத்து குலுங்கும் "பட்டர் ப்ரூட்'**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2012,22:54 IST

தாண்டிக்குடி : தாண்டிக்குடி மலைப்பகுதியில், மருத்துவ குணம் உள்ள "பட்டர் ப்ரூட்' மரங்கள் பூத்து குலுங்கின்றன. இம்மலைப்பகுதி முழுவதும் இம்மரங்கள் ஏராளமாக வளர்க்கப்படுகின்றன. ஆரம்பத்தில், நிழல் தரும் மரங்களாக வளர்க்கப்பட்டது. பழங்களுக்கு முக்கியத்துவம் இல்லாமல் இருந்தது.

நாளடைவில், இப்பழங்கள் அழகு சாதனங்களில் (பேசியல் கீரிம்) பயன்பாடுத்தப்படுகின்றன. இதனால் தேவை அதிகரித்தது. பழத்தில் புரோட்டீன் சத்து அதிகம் என்பதால் வயிறு நோய்களை குணப்படுத்தும். பழங்கள் தேவை அதிகரிப்பால், சாகுபடி பரப்பு அதிகரித்தது.

ஜனவரி முதல் வாரத்தில் பூக்க துவங்கி ஏப்ரல் துவக்கத்தில் பழங்கள் பறிக்க தயராகும். மலைப்பகுதி முழுமையும் பூத்துள்ள "பட்டர் ப்ரூட்' பூக்கள் மற்றும் காய்கள் கண்களுக்கு விருந்தாக உள்ளன.

---

**17 மாதமாக கொப்பரை வரத்தில்லை அரசு கொள்முதல் மையம் "வேஸ்ட்'**

பதிவு செய்த நாள் : ஜனவரி 30,2012,23:31 IST

பல்லடம் : வெளிமார்க்கெட்டில் கொள்முதல் விலை அதிகமாக இருப்பதால், கடந்த 17 மாதங்களாக பல்லடத்தில் உள்ள அரசு கொப்பரை நிலையத்துக்கு வரத்தில்லை.தென்னை விவசாயிகளை நசிவில் இருந்து காக்கும் வகையில், தமிழகத்தில் பல்லடம், செஞ்சேரி, பொள்ளாச்சி உட்பட 10 இடங்களில் அரசு கொப்பரை கொள்முதல் மையங்க ள் அமைக்க ப்ப ட்டு ள்ளன. கடந்த 2008ல் கொப்பரை உற்பத்தி விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ கொப்பரை ரூ.36.60க்கு கொள்முதல் செய்யப்பட்டது.இவ்விலை கட்டுப்படியானதாக இல்லை என விவசாயி கள் போர்க்0 காடி தூக்கி ன ர். இதன 0ல், 2009 மார்ச் மாதம் கொள்முதல் விலை

ரூ.44.50 என அரசு உயர்த்தியது. இதன் காரணமாக, பல்லடம் கொள்முதல் மையத்துக்குடன் கணக்கில் கொப்பரை வரத்துவங்கியது. 2010 ஜூலை 19 வரை ரூ.29 கோடியே 35 லட்சத்துக்கு, 11 ஆயிரத்து 299 டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டது.காங்கயம், வெள்ளக்கோவிலில் உள்ள வெளிமார்க்கெட் டில், அரசு நிர்ணய விலையை விட, கிலோவுக்குஐந்து முதல் 10 ரூபாய் வரை அதிகம் கொடுக்கத்துவங்கியதால், பல்லடம் பகுதி கொப்பரை உற்பத்தி விவசாயிகள் வெளிமார்க்கெட்டில் விற்கத்துவங்கினர். இதனால், கடந்த 17 மாதங்களாக அர" மையத்துக்கு ஒரு கிலோ கொப்பரைகூட, கொள்முதலுக்கு வரவில்லை. தற்போது, அரசு கொள்முதல் மைய விலைக்கும், வெளிமார்க்கெட் விலைக்கும் இடையே மூன்று முதல் ஐந்து ரூபாய் வரை மட்டுமே வித்தியாசம் நிலவி வருகிறது. என்றாலும்கூட, கொள்முதல் மையத்துக்கு ஒரு விவசாயிகூட வராததால், பல்லடம் கொப்பரை கொள்முதல் நிலைய அலுவலர்கள் கடந்த 17 மாதங்களாக, வேலையில்லாமல், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

முயலும் ஜெயிக்கும்; ஆமையும் ஜெயிக்கும்!
கணிதம் - தட்சிணாமூர்த்தி (பி.எஸ்.ஜி., சர்வஜன மேல்நிலைப்பள்ளி, கோவை): கணித பாடம் மிக எளிது; உரிய பயிற்சி, நிறைய கவனம் இருந்தால் 200க்கு 200 மதிப்பெண் சுலபம். கணக்கை அடிக்கடி எழுதிப்பார்த்து கொண்டேயிருந்தால் மனதில் உடனே பதிந்து விடும். புத்தகம் முழுவதுமுள்ள சூத்திரங்களை சிறு நோட்டில் எழுதி படிக்க வேண்டும். பழைய வினாத்தாள்களை அடிக்கடி படித்து, உங்கள் ஆசிரியரிடம் காண்பித்து, சரி பாருங்கள்.
இதுவரை கேட்காத வினாக்களை தேர்ந்தெடுத்து படித்தால், அக்கேள்வியை கேட்டால் நல்ல மதிப்பெண் பெறலாம். கணக்குகளை தெளிவாக செய்ய வேண்டும். எவ்வித அடித்தல் திருத்தலும் செய்யாதீர். தவறு செய்து விட்டால், அடுத்த பக்கத்தில் இருந்து துவங்குங்கள். விடைத்தாள் "பளிச்' என்று இருந்தால், மதிப்பெண் அதிகம் பெறலாம். கணக்குப்பாடத்தை பொறுத்தவரை முயற்சி செய்தால் கண்டிப்பாக முடியும்; முயற்சி செய்யாமல் எதுவும் முடியாது. முயலும் ஜெயிக்கும்; ஆமையும் ஜெயிக்கும். ஆனால், "முயலாமை' கண்டிப்பாக ஜெயிக்காது. இது, கணக்கு பாடத்துக்கு நன்றாக பொருந்தும்.

2.40 லட்சம் கோழிகளுக்கு கழிச்சல் நோய் தடுப்பூசி

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2012,00:20 IST

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் 2.40 லட்சம் கோழிகளுக்கு கழிச்சல் நோய் தடுப்பூசி போடப்படுகிறது. தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 2ம் தேதி முதல் 15ம் தேதி வரை கோழிகளுக்கு கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம் நடத்தப்படுகிறது. நெல்லை மாவட்டத்தில் 2.40 லட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி முகாம்கள் 2 வாரங்கள் நடத்தப்படும். அனைத்து கால்நடை மருந்தகங்கள், கால்நடை கிளை நிலையங்கள் பகுதிகளில் கிராமங்கள் தோறும் தினமும் இம்முகாம்கள் நடத்தப்படும். எனவே, கோழி வளர்ப்போர் தங்கள் பகுதிகளில் கோழிகளுக்கு தடுப்பூசி முகாம்களை பயன்படுத்தி கோழிகளை கழிச்சல் நோயில் இருந்து பாதுகாத்து கொள்ளலாம் என்று கலெக்டர் செல்வராஜ் தெரிவித்தார்.

---

*நடப்பு 2011–12 பருவத்தில் காபி உற்பத்தி 2.31% குறையும்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு 2011–12 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) காபி உற்பத்தி 2.31 சதவீதம் குறைந்து 2.95 லட்சம் டன்னாக சரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, கடந்த 2010–11 பருவத்தில் 3.02 லட்சம் டன்னாக இருந்தது. இதில் அராபிகா ரகம் 94,140 டன்னாகவும், ரோபஸ்டா ரகம் 2.07 லட்சம் டன்னாகவும் இருந்தது. நடப்பு பருவத்தில் அராபிகா விளைச்சல் 95 ஆயிரம் டன்னாகவும், ரோபஸ்டா மகசூல் 2 லட்சம் டன்னாகவும் இருக்கும் என கர்நாடக மாநில காபி விவசாயிகள் சங்கம் மதிப்பீடு செய்துள்ளது. காபி வாரியத்தின் முதல்கட்ட மதிப்பீடுகளின்படி காபி உற்பத்தி 3.22 லட்சம் டன்னாக இருக்கும் என தெரிகிறது. இதில் அராபிகா உற்பத்தி 1.04 லட்சம் டன்னாகவும், ரோபஸ்டா உற்பத்தி 2.17 லட்சம் டன்னாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

---

## *நடப்பு பருவத்தில் கூடுதலாக பத்து லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி?*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*2011 அக்டோபர் மாதம் தொடங்கிய சந்தைப்படுத்துதல் பருவத்தில் மேலும் 10 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் சர்க்கரை ஆலைகளின் வருவாய் அதிகரித்து, கரும்பு விவசாயிகளுக்கு உரிய காலத்தில் பணப்பட்டுவாடா செய்வதற்கான வாய்ப்புகள் உருவாகும் என மத்திய அரசு கருதுவதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.*

*மதிப்பீடுகள்*

*சர்க்கரை உற்பத்தி அமோகமாக இருக்கும் என்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் நடப்பு சந்தைப் பருவத்தில் (2011 அக்டோபர் – 2012 செப்டம்பர்) பத்து லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சர்க்கரை ஆலைகள் மேலும் 20 லட்சம் டன் ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்குமாறு கோரி வருகின்றன. சர்வதேச அளவில் விலை நிலவரங்கள் சாதகமாக உள்ளதை ஏற்றுமதியாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.*

*இந்த நிலையில் கூடுதலாக பத்து லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட வாய்ப்புள்ளது என அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.*

*மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையிலான அதிகாரம் பெற்ற அமைச்சர்களின் குழு ஒன்று பிப்ரவரி 7–ந் தேதி கூடுகிறது. அப்போது கூடுதல் சர்க்கரை ஏற்றுமதி குறித்து முடிவு எடுக்கப்பட உள்ளது. வேறு சில கோரிக்கைகள் பற்றியும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படும் என தெரிகிறது.*

*சர்வதேச அளவில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியில் பிரேசில் முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. எனினும் சர்க்கரை பயன்பாட்டில் இந்தியாவே முதலிடத்தில் உள்ளது. தற்போது நம் நாட்டில் சர்க்கரை பயன்பாடு 2.30 கோடி டன் என்ற அளவில் உள்ளது.*

*சர்க்கரை உற்பத்தி*

*நடப்பு 2011–12 பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 2.45 கோடி டன்னாக இருக்கும் என மத்திய அரசு மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அதே சமயம் சர்க்கரை ஆலைகளின் மதிப்பீடு இதைக் காட்டிலும் அதிகமாக 2.60 கோடி டன் என்ற அளவில் உள்ளது. ஆக, அரசு மதிப்பீடுகளின்படி பார்த்தாலும் உள்நாட்டு தேவைப்பாட்டைக் காட்டிலும் 15 லட்சம் டன் சர்க்கரை உபரியாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.*

*கடந்த 2010–11 பருவத்தில் இந்தியாவின் சர்க்கரை ஏற்றுமதி 26 லட்சம் டன்னாக*

*இருந்தது. இதில் 15 லட்சம் டன் கட்டுப்பாடிகளின்றி ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டது.*

---

தினகரன்

**உணவு உற்பத்தி 100 லட்சம் டன்னாக உயரும்**



மேட்டூர் அணையிலிருந்து முன் கூட்டியே பாசனத்திற்காக நீர் திறக்க முதல்வர் உத்தரவிட்டதால், மாநிலத்தில் அபரிமிதமான குறுவை விளைச்சல் ஏற்பட்டது. இதனால், கடந்த ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட 75.95 லட்சம் டன் என்ற அளவை விஞ்சி இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி முதல் முறையாக 100 லட்சம் டன் அளவை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமங்களில் வரவேற்பு: விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்கும் இந்த அரசின் சிறப்புத் திட்டங்கள் கிராமப்புற ஏழை மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளன. சுமார் 1.12 லட்சம் குடும்பங்கள் 2011 ,2012ம் ஆண்டில் இந்தத் திட்டங்களால் பயன் பெறும். புதிய ஒருங்கிணைந்த காப்பீடு 1.34 கோடி குடும்பங் கள் பயன்: புதிய ஒருங்கிணைந்த மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 1.34 கோடிக்கும் மேலான குடும்பங்கள் பயன்பெறுகின்றன.

பேறுகாலத்தில் தாய் இறப்பு விகிதம், குழந்தை இறப்பு விகிதம் போன்றவற்றை மேலும் குறைக்கும் நோக்குடன், விரிவான மகப்பேறு அவசர சிகிச்சைப் பிரிவுகள் வலுப்படுத்தப்பட்டதுடன், பச்சிளம் குழந்தைகளுக்கான 41 புதிய அவசர சிகிச்சைப்பிரிவுகளும் தொடங்கப்பட்டுள்ளன. இதுமட்டு மின்றி, ஏழை தாய்மார்களின் மகப்பேறு உதவித் தொகையை நாட்டிலேயே மிக உயரிய அளவாக 12,000 ரூபாய் என அரசு உயர்த்தியுள்ளது.

சமூகப் பாதுகாப்பு திட்டத்தில் மேலும் 5 லட்சம் பயனாளிகள்: நாட்டிலேயே உயர் அளவாக, சமூகப் பாதுகாப்பு உதவித் தொகையை இரட்டிப்பாக தமிழக அரசு உயர்த்தியது. 5 லட்சம் புதிய பயனாளிகள் சமூகப் பாதுகாப்பு உதவித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதோடு, முறைகேட்டைத் தடுக்கும் வண்ணம், அவரவர் வங்கிக்கணக்கின் மூலமாக நேரடியாகப் பணப்பட்டுவாடா செய்யவும்வ கைசெய்யப்பட்டுள்ளது. ஆதரவற்ற, ஒதுக்கப்பட்ட மக்களுக்கு முழுமையான ஒரு சமூகப்பாதுகாப்பு உதவித் திட்டத்தை தமிழ்நாடு பெற்றிருப்பதை இத்தகைய முயற்சிகள் உறுதி செய்யும்.

சுற்றுலாவில் தனியார்: ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியில் ஒருங்கிணைந்த சுற்றுலா உள்கட்டமைப்புத் திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது. அரசு தனியார் பங்களிப்புடன் தமிழகத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான கொள்கை வரும் ஆண்டுகளில் தீவிரமாக செயல்படுத்தப்படும்.

பட்டா மாறுதல் பலன்: அரசால் கொண்டு வரப்பட்ட விரைவுவழி பட்டா மாறுதல் திட்டம் நல்ல பயனை அளித்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூடுதலாக 50 விழுக்காடு பட்டா மாறுதல்கள் நடந்துள்ளன.நில அபகரிப்பு நடவடிக் கை தொடரும்: நில அபகரிப்பு மீதான நடவடிக்கை குறித்து ஆளுநர் உரையில்:

பலவந்தமாக அபகரிக்கப்பட்ட அப்பாவி மக்களின் நிலங்கள் இந்த அரசால் ஒவ்வொரு மாவட்டத் திலும் அமைக்கப்பட்ட நில அபகரிப்புத் தடுப்புப் பிரிவுகளால் மீட்டளிக்கப் பட்டுள்ளது. ஏழை, எளிய மக்களை அச்சுறுத்தி சுரண்டும் இத்தகைய நில அபகரிப்பாளர்களை சட்டத்தின்முன் கொண்டு வந்து உரிய நீதியை வழங்க இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்.

மாணவர் விடுதிகளுக்கு சொந்த கட்டிடங்கள்

சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் பழங்குடியினர் போன்றவர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விடுதிகளில் தங்கிப் பயிலும் சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கான உணவு மானியம் இந்த அரசால் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், வாடகைக் கட்டடங்களில் தற்போது இயங்கிவரும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித்தர முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆளுநர் ரோசய்யா உரையில் பல அம்சங்களும் இங்கே தனித்தனியாக தரப்பட்டுள்ளது.

தமிழ் ஆட்சிமொழியாக...

தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்க இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும். திருக்குறள், தெரிந்தெடுக்கப்பட்ட பாரதியார் மற்றும் பாரதிதாசன் படைப்புகளை சீன மற்றும் அரேபிய மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சிறந்த தமிழ் அறிஞர்களின் படைப்பு களைப் பாதுகாத்து, அவற்றை அனைவரிடத்தும் கொ ண்டு செல்லும் வகையில் நாட்டுடைமையாக்கப்பட்ட 1,472 புத்தகங்கள் தமிழ் இணைய பல்கலைக்கழக இணையதளத்தில் அரசால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

அரசு , தனியார் பங்களிப்பு விரைவில் கொள்கை அறிவிப்பு

சென்ற ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றவுடன் தொலைநோக்குத் திட்டம் 2025 தயாரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இது தொடர்பான திட்ட அறிக்கையை முதல்வர் விரைவில் வெளியிட இருக்கிறார். முக்கியமான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி என்ற ஒன்று தனியாக இந்த அரசால் ஏற்படுத்தப்படும். இந்த வகையில், திட்ட செயலாக்கத்தில் அரசு மற்றும் தனியார் நிதி ஆதாரங்களை ஒருங்கிணைக்க அரசு - தனியார் பங்களிப்புக் கொள்கை ஒன்றை இந்த அரசு விரைவில் வெளியிடும்.

கச்சத்தீவை திரும்ப பெறுவோம்

கச்சத்தீவு தொடர்பாக ஆளுநர் உரையில்: இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் இந்த அரசுக்கு ஆழ்ந்த கவலையளிப்பதாக உள்ளது. நமது ஆட்சேபங்களுக்குப் பிறகும் இந்நிகழ்வுகள் தொடர்கின்றன. இப்பிரச்னைக்குத் தீர்வுகாண இலங்கையிடம் மத்திய அரசு கடுமையாக வலியுறுத்த வேண்டும்.

பாக் வளைகுடாப் பகுதியில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமையைப் பாதுகாக்கவும் ,அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்கவேண்டும் என்று, இந்த அரசுகேட்டுக்கொள்கிறது. கச்சத்தீவைத் திரும்பப் பெறுவதன் மூலமே தமிழக மீனவர்கள் இழந்த உரிமையை மீளப்பெற இயலும் என்ற இந்த அரசின்உறுதியான முடிவினை இத்தருணத்தில் நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

மாநகரங்களில் பெருந்திட்டம்

புறநகர்ப்பகுதிகள் இணைக்கப்பட்டு, சென்னை மாநகராட்சி தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதுபோலவே, ஏழு பிற மாநகராட்சிகள் மற்றும் எட்டு நகராட்சிகளின் எல்லைகளும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. நகர்ப்புர உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவைப்படும் கூடுதல் நிதி ஆதாரத்தைப் பெறுவதற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சி இயக்கம் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி இயக்கம் ஆகியவற்றை இந்த அரசு ஏற்கெனவே தொடங்கியுள்ளது.

சாலைகள், தெருக்கள், பூங்காக்கள் போன்ற பொது இடங்களை மேம்படுத்துவதுடன் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை முறைகளைச் செயல்படுத்தவும் இந்த அரசு தொடர்ந்து கவனம் செலுத்தும். பெருந்திட்டம் இல்லாத விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், சீரான மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் புதிதாக பெருந்திட்டம் தீட்டப்படும்.

பிளாஸ்டிக் ஒழிப்பு நடவடிக்கை

பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதை மாநிலம் தழுவிய மக்கள் இயக்கமாக

மேற்கொள்ள ரூ.5 கோடியும், பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு பரிசோதனை அடிப்படையில் தார் சாலைகளை அமைப்பதற்கு ரூ.50 கோடியும் இந்த அரசு கடந்த பட்ஜெட் அறிக்கையில் ஒதுக்கியிருந்தது. இம்முயற்சியின் விளைவாக, பிளாஸ்டிக்கழிவுகளைக் கொண்டு 50 கோடி மதிப்பீட்டில் சுமார் 146 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. பிளாஸ்டிக் கழிவுகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேட்டைத் தடுத்து, நீடித்த பயன் தரும் இது போன்ற சாலைகளை பெருமளவில் அமைக்க விரிவான தொரு திட்டம் செயல்படுத்தப்படும்.

நொய்யல் தீர்வு நானோ

நொய்யல் ஆற்றில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் பொருட்டு, பொதுக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களை மீண்டும் செயல்படச் செய்ய அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துவருகிறது. அருள்புரம் பொதுக்கழிவு சுத்திகரிப்பு ஆலையில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வரும் கழிவுநீரே வெளியேறாத நிலையை எய்தக் கூடிய நானோ வடிகட்டல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில், மூடிக்கிடக்கும் பொது சுத்திகரிப்பு நிலையங்களை மீண்டும் செயல்படவைக்க வட்டியில்லாக்கடனாக 179 கோடி ரூபாயை இந்த அரசு ஏற்கெனவே வழங்கியுள்ளது.

இதுதவிர, நீதிமன்றத்தால் இழப்பீட்டுத் தொகை உறுதி செய்யப்படுவதை எதிர்நோக்கி, நொய்யல் பாசனப்பகுதி விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு 75 கோடி ரூபாய் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை, சம்பந்தப்பட்ட தொழில் அதிபர்கள் மற்றும் விவசாயிகளிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.

4,704 மெகாவாட் மின்சாரம்

கடன் சுமையால் மூழ்கும் நிலையிலுள்ள மின்வாரியத்திற்கு புத்துயிரூட்ட ரூ.2,600 கோடி பங்கு மூலதனமாகவும், 955 கோடி கடனாகவும் அரசு வழங்கியுள்ளது. மின் உற்பத்தியை அதிகப்படுத்தவும், பற்றாக்குறையை குறைக்கவும் அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து எடுத்து வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்றதில் இருந்து காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்ய நிறுவப்பட்ட 556 மெகாவாட் தவிர, மாநில தொகுப்பில் 30 மெகாவாட்டும், மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறப்படும் பங்காக 113 மெகாவாட்டும் கூடுதல் மின் உற்பத்தித்திறனாக

சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் 4,704 மெகாவாட் அளவிற்கு கூடுதல் மின்சாரம் கிடைக்கும் வகையில் புதிய திட்டங்கள் செயல்பட தொடங்கும்.

நகர்ப்புற வறுமை ஒழிப்பு திட்டம்

நகர்ப்புரங்களில் நிலவும் அதிக வறுமை நிலையைப் போக்குவதற்கான ஒருங்கிணைந்ததிட்டம் ஒன்று வரும் பட்ஜெட் கூட்டத்தில் அறிவிக்கப்படும். வறுமை, வேலையின்மையோடு தொடர்புடைய பிரச்னையாகும். திறன்மேம்பாட்டுப் பயிற்சியின் மூலமாக இளைஞர்களை வேலைவாய்ப்பு பெறும் தகுதியுடையவர்களாக உருவாக்குவதையும், புதியதொழில் முனைவோரை ஊக்குவித்து வேலைவாய்ப்பைப் பெருக்குவதையும், இருமுனை நடவடிக்கைகளாக இந்தஅரசு செயல்படுத்தி வருகிறது. திறன் வளர் பயிற்சிகளையும் பயிற்சி மையங்களையும் தேர்ந்தெடுத்தல் மற்றும் பயிற்சிகளைக் கண்காணித்தல், பயிற்சி பெற்றவர் வேலைவாய்ப்பைப் பெறும்வரை கண்காணித்தல் போன்றவை ஒரே அமைப்பின்கீழ் கொண்டு வரப்படும்.

வளர்ச்சி பணிகளுக்கு ரூ.1.85 லட்சம் கோடி
திட்ட வடிவமைப்பில் சுதந்திரம் தேவை

மந்தமான வளர்ச்சி, தொடர்ந்து காணப்படும் அதிக பணவீக்க அளவு, சரிந்து வரும் ரூபாயின் மதிப்பு, உயர்ந்து வரும் வட்டி விகிதம் ஆகியவை நாம் உயர்வளர்ச்சி இலக்கை எட்டுவதற்கு தடை கற்களாக உள்ளன. இதன் விளைவாக, முதலீடுகள் குறைந்து வருவதுடன் தேசிய அளவில் 2011,2012ம் ஆண்டிற்கான வளர்ச்சி மதிப்பீடு கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பொருளாதார மந்த நிலையின் எதிர் மறை விளைவுகளால் மாநிலப் பொருளாதாரம் பாதிக்கப்படுவது தவிர்க்க இயலாதது ஆகும்.
இந்த எதிர்மறை சூழ்நிலைகளுக்கு இடையிலும், உள்கட்டமைப்புக்கும் சமூகப் பாதுகாப்புக்கும் எவ்வித குறைவுமின்றி போதிய நிதியை ஒதுக்கீடு செய்வதில் அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. வரும் 12வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இந்த அரசு 1,85,000 கோடி ரூபாயைத் திட்டப்பணிகளுக்கு செலவிட திட்டமிட்டுள்ளது.

இது 11வது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் செலவிடப்பட்ட 85,000 கோடி ரூபாயை விட இரண்டு மடங்குக்கும் அதிகமானதாகும். இந்த உயர் இலக்கு தமிழ்நாட்டை

மீண்டும் துரித வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்லும். மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையில் மத்திய அரசு சட்டங்களை இயற்ற தொடர்ந்து முயற்சி செய்து வருவதும், திட்டங்களை வடிவமைப்பதில் அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான அணுகு முறையைத் திணிப்பதும் மத்திய மாநில உறவுகளில் ஆரோக்கியமான சூழ்நிலை ஏற்பட வழிவகுக்காது.

இணக்கமான செயல் முறையைப் பின்பற்றி, பரந்த குறிக்கோள்களை மட்டும் மத்திய அரசு நிர்ணயிக்கவேண்டும் என்றும், அத்தகைய திட்டங்களில் மத்திய நிதியுடன் மாநிலத்தின் நிதியையும் ஒருங்கிணைத்து, மாநிலங்களின் தேவைகளுக்கேற்ப, அந்தந்த மாநில அரசுகளுக்கே திட்டங்களை வடிவமைக்கும் சுதந்திரத்தை அளிக்க வேண்டும் என்றும் இந்த அரசு வலியுறுத்துகிறது.

மோனோ ரயில் விரைவில் டெண்டர்

2011,2012ம் ஆண்டில், 539.83 கோடி ரூபாய் செலவில் 3,000 புதிய பஸ்கள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், முதல் முறையாக இன்ஜின், அடிச்சட்டம் ஆகியவை நல்ல நிலையில் உள்ள 1,432 பழைய பஸ்களின் மறு கட்டுமானத்துக்கு 97.58 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த புதிய முயற்சிகள் போக்குவரத்துக் கழகங்களின் செயல் திறனை மேம்படுத்தி, பொதுமக்களுக்கு சிறந்த சேவையை அளிக்க உதவும் என நம்புகிறேன். சென்னையில் ஒருங்கிணைந்த பன்முறை நகர் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தும் நோக்கத்தில், மோனோ ரயில் திட்டத்தை செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

அரசு ஆபீஸ்கள் உறுதி தன்மை ஆராய வல்லுனர் குழு

சேப்பாக்கம் அரசு அலுவலக வளாகத்தில் ஜனவரி 15ம் தேதி ஏற்பட்ட தீ விபத்தை போன்று வருங்காலங்களில் நிகழாது தவிர்க்கும் வகையில், அரசு அலுவலகங்கள் செயல் படும் அனைத்து தொன்மையான கட்டடங்களின் கட்டமைப்பு உறுதித்தன்மையை மதிப்பீடு செய்ய ஒரு வல்லுநர்குழு அமைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் பொதுநுழைவு தேர்வு எதிர்ப்பு தொடரும்

கற்றல் முறையை எளிதாக்கவும், மாணவர்களின் சுமையை குறைக்கவும், 2012, 2013ம் கல்வியாண்டு முதல் முப்பருவ முறையை எட்டாம் வகுப்பு வரை அனைத்து பள்ளிகளிலும் அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. குறுகிய காலத்தில், 11 கலை, அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. 34 அரசு கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கு மடிகணினி: மாணவர்களின் கணினி அறிவை மேம்படுத்த, விலையில்லா மடிக்கணினி வழங்கும் மாபெரும் திட்டத்தை தொடங்கியுள்ளோம். மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் கல்விகளுக்கு, மத்திய அரசு கொண்டு வர உத்தேசித்துள்ள பொது நுழைவுத் தேர்வு முறை நமது மாணவர்களின் நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனால் அதை நாம் தொடர்ந்து எதிர்ப்போம்.

---